# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் – 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், மூன்றாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 6-ஆம் தேதி புதுச்சேரியில் தொடங்குகிறார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மூன்றாம் கட்டமாக புதுச்சேரியில் பரப்புரையை தொடங்குகிறார்.



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **06.04.2026 (திங்கட்கிழமை)** | | |
| மாலை 5 மணி | புதுச்சேரி | புதுச்சேரி மாநிலம் |
| **07.04.2026 (செவ்வாய்க் கிழமை)** | | |
| காலை 9 மணி | கடலூர் (பொதுக்கூட்டம்) | திட்டக்குடி, விருத்தாசலம், குறிஞ்சிப்பாடி, பண்ருட்டி, கடலூர், நெய்வேலி, புவனகிரி, காட்டுமன்னார்கோவில், சிதம்பரம் |
| மாலை 5 மணி | நாகப்பட்டினம் (பொதுக்கூட்டம்) | நாகப்பட்டினம், கீழ்வேளூர், வேதாரண்யம் |
| **08.04.2026 (புதன் கிழமை)** | | |
| காலை 9 மணி | சீர்காழி (பொதுக்கூட்டம்) | மயிலாடுதுறை, சீர்காழி, பூம்புகார் |
| மாலை 5 மணி | விழுப்புரம் (பொதுக்கூட்டம்) | திண்டிவனம், வானூர், விழுப்புரம், விக்கிரவாண்டி, திருக்கோவிலூர், செஞ்சி, மயிலம் |
| **09.04.2026 (வியாழக் கிழமை)** | | |
| காலை 9 மணி | திருவண்ணாமலை (பொதுக்கூட்டம்) | உளுந்தூர்ப்பேட்டை, ரிஷிவந்தியம், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி, செங்கம், திருவண்ணாமலை, கீழ்பெண்ணாத்தூர், கலசப்பாக்கம், போளூர், ஆரணி, செய்யாறு, வந்தவாசி |
| மாலை 5 மணி | மறைமலைநகர் (பொதுக்கூட்டம்) | செங்கல்பட்டு, திருப்போரூர், செய்யூர், மதுராந்தகம், உத்திரமேரூர், தாம்பரம், பல்லாவரம் |

**குறிப்பு :** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18
நாள் : 04.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



கரூர் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் ஆசி. எம். தியாகராஜன் வேட்புமனு தாக்கல் செய்தார். இந்நிகழ்வினை முன்னிட்டு கரூர் – கோவை சாலையில் தேர்தல் பணிமனை திறப்பு விழா நடைபெற்றது. இதில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்து கரூர் மாவட்டச் செயலாளர், மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார். ஆயிரக் கணக்கில் தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



திருவெறும்பூர் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வேட்பாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன் துரை வைகோ எம்.பி., கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் ஏராளமானோர் பங்கேற்றனர்.